

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (22.10.2025) அமைச்சர் துரைமுருகன் காணொலிக் காட்சி வாயிலாக வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள், வெள்ளத்தடுப்பு பணிகள், நீர் இருப்பு நிலவரங்கள் மற்றும் தற்போதைய வடகிழக்கு பருவமழையினால் நீர்நிலைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு விவரங்கள் குறித்து அனைத்து மண்டலத் தலைமைப் பொறியாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். இவ்வாலோசனைக் கூட்டத்தில் ஜெ.ஜெயகாந்தன், நீர்வளத்துறையின் சு.கோபாலகிருஷ்ணன், ஆர்.சுப்பிரமணியன் மற்றும் சி.பொதுப்பணி திலகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை அய்யா தெருவில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதை நேற்று முன்தினம் (22.10.2025) அதிகாலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2025) சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை அய்யா தெருவில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்க தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதை ஆய்வு செய்தார். இந் நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமெரிக்காவிலுள்ள – கலிபோர்னியாவைச் சேர்ந்த

# திருமதி.தேன்மொழி சவுந்தரராஜனுக்கு ‘வைக்கம்’ விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

**சென்னை, அக். 24 -**

**2025 - ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருது அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவைச் சேர்ந்த திருமதி. தேன்மொழி சௌந்தரராஜன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றப் பேரவையில், கடந்த 30.03.2023 அன்று எல்லை கடந்து சென்று சமூக நீதிக்காக வைக்கத்தில் போராடிய தந்தை பெரியார் அவர்களை நினைவு கூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் “வைக்கம் விருது” சமூக நீதி நாளான செப்டம்பர் 17-ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி 110-இன்கீழ் அறிவித்தார்.

அதன்படி, 2025-ஆம் ஆண்டிற்கான “வைக்கம் விருது” திருமதி. தேன்மொழி சௌந்தரராஜன் அவர்களுக்கு வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. திருமதி. தேன்மொழி சௌந்தரராஜனுடைய பெற்றோர் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அமெரிக்காவில் வசித்து வரும் திருமதி. தேன்மொழி சௌந்தரராஜன் அவர்கள் இந்திய அமெரிக்க ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் ஆவார். கட்டமைப்பு சாதியத்தால் ஓரங்கட்டப்பட்டவர்களின் உரிமைகளுக்காக அவர் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகிறார். அமெரிக்காவிலும், உலக அளவிலும் சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் சிவில் உரிமைகள் அமைப்பான ஈக்வாலிட்டி லேப்ஸின் நிறுவனர் / நிர்வாக இயக்குநர் ஆவார். திருமதி. தேன்மொழி சௌந்தரராஜன் அவர்கள் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் சாதி பாகுபாட்டிற்கு எதிரான அவரது பணிகளுக்காகவும், ஊடகம் மற்றும் தொழில்நுட்ப நீதித் துறையில் அவரது பங்களிப்புகளுக்காகவும் அறியப்படுகிறார். திருமதி. தேன்மொழி சௌந்தரராஜன் அவர்கள் “The Trauma of Caste - A Dalit Feminist Meditation on Survivorship, Healing, and Abolition” என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார். இதன் நோக்கம் சாதியின் பெயரால் பாகுபாடு காட்டப்படுவதை முடிவுக்கு கொண்டு வருவதாகும். இந்த படைப்பிற்காக இவர் Asian/Pacific American Awards for Literature (APAAL) என்ற விருதைப் பெற்றுள்ளார். மேலும், தெற்காசிய ஆய்வுகள் துறையில் புலமைப்பரிசில் (scholarship) சிறந்த சாதனைக்காக South Asian Literary Association (SALA) Award-யும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வைக்கம் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி. தேன்மொழி சௌந்தரராஜன் அவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.

### எழும்பூர் ரயில் நிலையத்தில்

# அடிப்படை வசதிகள் - பராமரிப்புக் குறைபாடுகளை உடனடியாக சரிசெய்க!

## மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கோரிக்கை!

சென்னை, அக். 24 -

கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன், எழும்பூர் ரயில் நிலையத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் பராமரிப்பு குறைபாடுகள் மற்றும் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் நடவடிக்கை எடுப்பது குறித்து மீண்டும் தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

அவரது கடிதத்தில், “எழும்பூர் ரயில் நிலையம் சென்னையின் முக்கியமான ரயில் முனையங்களில் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான பயணிகள் தினமும் பயன்படுத்தும் இந்நிலையத்தில் குடிநீர், மின் விளக்கு, கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் புறக்கணிக்கப்படுவது வருந்தத்தக்கது”.



சமீபத்திய ஊடகச் செய்திகள், மழைக்காலத்தில் ரயில் நிலைய நடை மேடை மற்றும் நடை மேம்பாலத்தில் மின்விளக்குகள் செயலிழந்துள்ளன. இதனால் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர்.

இக்குறைபாடுகளை உடனடியாக சரிசெய்து, அனைத்து அடிப்படை வசதிகளும் இடையூறு இல்லாமல் செயல்படும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொள்ளும் விரிவான ஆய்வுக் கூட்டங்கள் விரைவில் ஏற்பாடு செய்யப்பட்டு, நிலையத்தின் முழுமையான பராமரிப்பு நிலை மதிப்பீடு செய்யப்பட்டு, நீண்டகால பராமரிப்புக்கான செயல் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சேலம் மத்திய மாவட்ட கழக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், அக். 24 -

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்- அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்குட்பட்ட சேலம் வடக்கு, சேலம் தெற்கு, ஓமலூர் மற்றும் சேலம் மேற்கு, ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டமானது கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக பொறுப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள், பொறுப்புக்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

29.10.2025 புதன்கிழமை

நேரம் சட்டமன்றத் தொகுதி இடம்

1.காலை 10.00 மணி சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி K.M.B. திருமண மண்டபம், 5ரோடு.

2. பிற்பகல் 03.00 மணி சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி K.M.B. திருமண மண்டபம், 5ரோடு.

30.10.2025 வியாழக்கிழமை

3.காலை 10.00 மணி ஓமலூர் சட்டமன்றத் தொகுதி M.R.P முத்து மஹால், ஓமலூர்

4.பிற்பகல் 03.00 மணி சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி K.M.B. திருமண மண்டபம், 5ரோடு.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி, நத்தமேட்டில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடையை, கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்து, ரேஷன் பொருட்கள் வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், கரூர் வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் வேலுச்சாமி, உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### 7 வாகன சுரங்கப் பாதைகளில் மழை நீரை வெளியேற்ற நடவடிக்கை!

# வெள்ளத் தடுப்புப் பணி மேற்கொள்ள 34 ரோந்துக் குழுக்கள்!

## சாலைகள், மழைநீர் வடிகால் பணிகளை ஆய்வு செய்தபின் – அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

சென்னை,அக். 24 -

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக, சென்னையில் உள்ள சாலைகளை மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நேரில்ஆய்வு மேற்கொண்டார்.



வடகிழக்குப் பருவமழை 16.10.2025 அன்று தொடங்கி, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வருவதால், நேற்று (22.10.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , சென்னை ஓ.எம்.ஆர் சாலையான பெருங்குடி, ஒக்கியம் மடுவு, சோழிங்கநல்லூர், பள்ளிக்கரணை உள்ளிட்ட சாலைகள், மழைநீர் வடிகால் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த பணிகளை மேற்கொள்ள நெடுஞ்சாலைத்துறை சார்பில், பெருங்குடி பகுதியில் முதல் கட்டமாக 10 கோட்ட பொறியாளர்களுக்கு வாக்கி டாக்கிகளை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் செய்திளார்களை சந்தித்து;

நெடுஞ்சாலைத்துறை மூலமாக, சென்னை பெருநகர மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய மாநகராட்சி பகுதிகளை உள்ளடக்கிய சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 613 கி.மீ. நீளச் சாலைகள் பராமரிக்கப்படுகிறது என்றும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 423 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால், 18,000 சில்ட் கேட்ச் பிட், 752 சிறுபாலங்கள், 39 சிறிய பாலங்கள், 20 பெரிய பாலங்கள் ஆகியவையும் நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார்.

பரங்கிமலை சுரங்கப்பாதை, கத்திப்பாரா சுரங்கப்பாதை, மீனம்பாக்கம் சுரங்கப்பா தை, வியாசர்பாடி சுரங்கப்பாதை, தில்லைகங்கா நகர் சுரங்கப்பாதை, தர்கா சுரங்கப்பாதை, கத்திவாக்கம் சுரங்கப்பாதை ஆகிய 7 வாகன சுரங்கப்பாதைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 7 வாகன சுரங்கப்பாதைகளிலும் மழைநீரை வெளியேற்ற தயார் நிலையில், அதிக திறன் கொண்ட நீர் மூழ்கி இயந்திரங்களும், மின் மற்றும் டீசல் பம்புசெட்களும், ஜெனரேட்டர்களும் தயார் நிலையில் உள்ளன என்றும், 34 வெள்ள ரோந்து குழுக்கள் 24/7 நேரம் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். 500 சிறப்பு சாலைப் பணியாளர்கள் வெள்ளப் பணியினை மேற்கொள்வார்கள் என்றும், கோட்டம், வட்டம் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் அலுவலகத்தில் வெள்ள பாதிப்பினை எதிர்கொள்ள 24 மணி நேரமும் வெள்ளக் கட்டுப்பாட்டு அறை செயல்படுகிறது என்றும் தெரிவித்தார்.

10 வட்டங்களுக்கும் தலைமைப் பொறியாளர்கள் நிலையில் கண்காணிப்புப் அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், 15 இடங்கள் அதிகம் பாதிப்படையும் இடங்களாக கண்டறியப்பட்டுள்ளது. இதில், 21 ராட்சஷ மோட்டார்கள் தயார் நிலையில் உள்ளன என்றும், OMR சாலையில் ஒக்கியம் மடுவு பகுதியில் மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வருவதால் மழைநீர் தேங்காமல் தடுக்கவும், 17 சென்டிமீட்டர் மழை பெய்தாலும், ஒரு மணி நேரத்தில் மழைநீர் வடியும் அளவிற்கு ராட்சஷ மோட்டார்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மேடவாக்கம் சோழிங்கநல்லூர் சாலையில் பள்ளிக்கரனை சதுப்புநிலம் சோழிங்கநல்லூர் பகுதியில் இருந்து, நேரடியாக பக்கிஹாம் கால்வாயினை சென்றடையும் வகையில் பெரிய மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி நிறைவு பெற்றவுடன் மழைநீர் வடிய ஏதுவாக இருக்கும் என்றும், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த களஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர் இரா. செல்வராஜ், , சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், தலைமைப் பொறியாளர் எஸ். பழனிவேல், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், நேற்று (22.10.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை2025 தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.